தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு – 12 போன்: 5830

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 146

National Tamil Daily தேசிய தினசரி

(7-7-65)

விசுவாவசு ஆனி 23 ரபி: அவ்வல் 7 புதன்கிழமை

26 வது ஆண்டுவிழாவை
முன்னிட்டு
அரைச்சலார்
22-6-65 முதல்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

# ஸ்டான்லி ஜயவீரா இல்லத்தில் சோதனை

## 60 அந்தரங்க 'பைல்'களை சி.ஐ.டி. பொலிசார் கைப்பற்றினர்

### விசாரணைகள் இன்று தொடர்ந்து நடைபெறும்

கொழும்பு, செவ்வாய்

பிரதம மந்திரியின் பொறுப்பிலுள்ள பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின், உதவிக் காரியதரிசி திரு. ஸ்டான்லி ஜயவீரா இன்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பின்னர் நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டார். இவர் மீது சி. ஐ. டி. பொலிஸார் நாளை புதன்கிழமை தொடர்ந்து விசாரணை நடத்துவார்கள்.

திரு. ஸ்டான்லி ஜயவீரா வீட்டில், சி ஐ டி பொலிஸார் திடீரென சோதனையிட்ட பொழுது, அங்கு அறுபது அந்தரங்க தஸ்தாவேஜுகள் இருக்கக் கண்டு பிடித்தனர்.

திருமதி ஸ்ரீமாபண்டாரநாயக்காவின் ஆட்சி காலத்தின் போது குறிப்பிட்ட அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக திரு. ஸ்டான்லி ஜயவீரா நியமிக்கப்பட்டார். இவர், திரு. என் கியூ டயஸின் வலக்கரமாக இருந்ததுடன் அவரது உதவிக் காரியதரிசியாகவும் கடமையாற்றினர்.

சி ஐ டி பொலிஸார் இன்று திரு. ஸ்டான்லி ஜயவீரா வீட்டில் திடீரென சோதனையிட்ட பொழுது, அறுபது அந்தரங்க தஸ்தாவேஜுகளை ("பைலை") இருக்கக் கண்டெடுத்தனர். இதைத் தொடர்ந்து ஸ்டான்லி ஜயவீரா கைது செய்யப்பட்டார்.

கடைசியாகக் கிடைத்த தகவலின்படி இவரை சி ஐ டி பொலிஸார் விசாரணை செய்தனர் என்றும் நாளை புதன்கிழமை மீண்டும் வருமாறு அவருக்கு உத்தரவிட்டு விடுவித்தனர் என்றும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

திரு ஸ்டான்லி ஜயவீரா கைதுசெய்யப்பட்டது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்களிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

---

## பார்லிமெண்டில் சட்டமூலங்கள் தமிழிலும் வெளியாகும்

### கிளிநொச்சி எம். பி. யின் பிரேரணையை அரசாங்க பார்லிமெண்டரிக்குழு ஏற்றது

கொழும்பு, செவ்வாய்

ஜனப்பிரதிநிதிகள் சபையில் சட்டமூலங்களையும், அறிக்கைகளையும், ஆட்சி அறிக்கைகளையும் இனிமேல் அமைச்சர்களும், துணை அமைச்சர்களும் தமிழிலும் வெளியிடுவர் இதுவரை காலமும் இவை சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே சமர்ப்பிக்கப்பட்டுவந்தன.

பிரதிநிதிகள் சபையில் அமைச்சர்களும், துணை அமைச்சர்களும் சட்ட மூலங்களையும் அறிக்கைகளையும், ஆட்சி அறிக்கைகளையும் வேறு ஒழுங்கு முறைகளையும் தமிழிலும் வெளியிடவேண்டுமென இன்று நடைபெற்ற அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி எம் பி திரு கா பொ இரத்தினம் கொண்டுவந்த பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு கா பொ இரத்தினம் கொண்டுவந்த வேறு இரு பிரேரணைகளும் முன் குறிப்பிட்ட பிரேரணையும் அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவினால் ஏற்கப்பட்டு நீதியமைச்சரின் அங்கீகாரத்துக்காக அனுப்பிவைக்கப்பட்டது

மற்றைய இரண்டு பிரேரணைகளும் வருமாறு —

அரசகரும நூல்வெளியீட்டுப் பகுதியையும் கல்வித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவந்து, நூல்வெளியீட்டை கல்வித் திணைக்களமே நிர்வகித்தல்.

இதுவரை சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டும் தமிழ் மொழி பெயர்க்கப்படாத ஆங்கில நூல்களை மொழி பெயர்க்க உடனடி நடவடிக்கை எடுத்தல். சிங்கள மொழி பெயர்ப்பு பகுதியில் உள்ளது போல தமிழ்ப் பகுதியிலும் பொறியியல், மருத்துவம், சட்டம் ஆகிய துறைகளுக்கு ஒவ்வொரு கண்காணிப்பாளர்களை நியமித்தல்.

---

## "வாக்காளர் ஜாபிதாவில் எங்களையும் பதிவு செய்க!"

### கிளிநொச்சி குடியேற்ற வாசிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சிப் பகுதியில் குடியேறி வசிப்பவர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்யமுடியாதன் காரணமாக அவர்கள் தங்கள் பதிவுசெய்ய யாழ். அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்திருந்தனர்.

குடியேற்றவாசிகளும் தங்கள் பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்து கொள்ளும்படி யாழ்ப்பாண அரசாங்கஅதிபரை கேட்டிருந்ததாகவும் அப்பெயர்களை அவர் பதிவுசெய்ய மறுத்துவிட்டதாகவும் தெரிய வருகிறது.

தற்பொழுது இந்த 600 குடியேற்ற வாசிகளும் தங்கள் பெயர்களை இடாப்பில் பதிவு செய்ய அரசாங்க அதிபருக்கு உத்தரவிடும்படியும், அவரின் முன்னைய தீர்ப்பைத் தள்ளிவைக்கும்படியும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் கோரியுள்ளனர்.

வாக்காளர் இடாப்புக்களை திருத்தி அமைக்கும் அதிகாரி என்ற கோதாவிலேயே இம்மனுக்களை 600 குடியேற்ற வாசிகளும் மாவட்ட நீதிபதிக்கு மனுச் செய்துள்ளார்கள் எனவும் தெரியவருகிறது.

---

### சுதந்திரக்கட்சி செனட்டர் ராஜினாமா

கொழும்பு, செவ்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செனட்டர் லூனவில, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ராஜினாமா செய்து விட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு இவர் அனுப்பிய ராஜினாமா கடிதத்தில்; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மார்க்ஸிய வாதிகளுடன் சேர்ந்துவிட்டதே தமது ராஜினாமாவுக்கு காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

---

### பிரதமருக்கு மேலும் பொறுப்பு

கொழும்பு, செவ்வாய்

பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவுக்கு மேலும் ஒரு மந்திரிப்பதவி வழங்கப்பட்டிருக்கிறது. மற்றைய பொறுப்புகளுடன் பொருளாதார அபிவிருத்தித்திட்ட மந்திரியாகவும் அவர் கடமைபுரிவார்.

---

பார்லிமெண்டில்

### துறைமுக விவகாரம்

கொழும்பு, செவ்

காங்கேசன்துறை துறைமுகத்தைப் பற்றி சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தவர் பாராளுமன்றத்தில் கேட்ட கேள்வி ஒன்றிற்கு தேசிய மந்திரி திரு வி. ஏ. சுகததாசா பதிலளிக்கையில் காங்கேசன்துறை, காலி முதலிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீட்டை 1965-66 ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கூறினர்.

---

வடபகுதி

## இராணுவ அட்டூழியம் பற்றி ஆராய கமிட்டி நியமனம்

### தமிழரசுகட்சி அரசாங்க பார்லிமெண்டரி குழு நடவடிக்கை

கொழும்பு, செவ்

தமிழரசுக் கட்சியின் அரசாங்க பாராளுமன்றக் குழு இன்று காலை கூடியபோது வடபகுதியில் உள்ள இராணுவம் பற்றிக் கவனமாக ஆராயப்பட்டது. இராணுவத்தினரை வடபகுதியிலிருந்து வாபஸ் பெறுவது குறித்து அரசாங்கத்துடன் ஆலோசனை நடத்த ஐவர் கொண்ட உபகுழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம், க. துரைரத்தினம், கா. பொ இரத்தினம், எஸ். எம் மாணிக்கராசா ஆகியோர் கொண்ட உபகுழு இராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்தி இராணுவத்தை வாபஸ் பெறக் கோருவர்.

இராணுவத்தைச் சேர்ந்த "சிங்க றெஜிமெண்ட்" பிரிவினரே வடபகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பெரும் இன்னல்களை விளைவித்து வருவதாகவும், இவர்களை அங்கிருந்து வாபஸ் பெறவேண்டுமெனவும் உபகுழு அரசாங்கத்தை கட்டாயப்படுத்தும்.

பொலிஸ் உத்தியோகஸ்தர்களை பொதுமக்கள் அவர்களுக்கு வழங்கப்படும் இலக்கப்பட்டியல் மூலம் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது எனவும், ஆனால் இராணுவத்தினர் எல்லோருமே ஒரேவித உடையை அணிந்திருப்பதால் அவர்களை பொதுமக்களால் சுலபமாக அடையாளம் காண முடியவில்லை என்றும் அவர்களை பொதுமக்கள் சுலபமாக அடையாளம் கண்டுகொள்ள உடுப்புகளில் இலக்கங்களை பொறித்தோ, வேறு மாற்றங்கள் செய்யுமாறோ திரு. செல்வநாயகம் இராணுவத் தளபதி கேர்ணல் உடுகமவைக் கேட்டுள்ளார்.

---

### யாழ்ப்பாணத்திற்கு வானொலி நிலையம்

கொழும்பு, செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் வானொலி அஞ்சல் நிலையமொன்றையும், ஒலிபரப்பு நிலையமொன்றையும் மிக விரைவில் நிறுவுமாறு இராஜாங்க மந்திரியை வற்புறுத்தவும், அது சம்பந்தமாக

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

உலகம் வேகமாக ஒற்றுமையை நோக்கி மாறுகிறது. எல்லோரும் மக்கள் வேற்றுமை வழிகளிலேயே சிந்தனை செய்தால் பெருங்குழப்பங்கள் ஏற்பட்டுவிடும். அறிவாளிகள் புதுயுகத்துக்கான நல்வழி காட்டவேண்டும்.

— நேருஜி

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆனி ௴ 23 ௳ (7-7-65)

## அரசாங்க விடுமுறைகள்

போயா தினங்களையும் ஞாயிற்றுக்கிழமைகளையும் அரசாங்க விடுமுறை தினங்களாகப் பிரகடனம் செய்வதெனவும் வெள்ளிக்கிழமைகளில் முஸ்லிம்களின் வழிபாட்டுக்காக இரண்டுமணி நேரமும் ஓய்வு கொடுப்பதெனவும் அரசாங்கக்கட்சியினர் தீர்மானித்துள்ளனர். இனி சனிக்கிழமை (அது போயா தினமாக இல்லாவிடில்) முழு வேலைநாளாகவே இருக்கும்.

பௌர்ணமி, அமாவாசை, இரு அட்டமிகள் ஆகியவை ஒரே மாதத்தில் வரும் நான்கு போயா தினங்களாகும். ஞாயிற்றுக்கிழமையன்றும் இத்தினங்கள் வரக்கூடும். போயா தினங்களையும் ஞாயிற்றுக்கிழமைகளையும் விடுமுறை தினங்களாகக் கணித்தால் ஒரு மாதத்தில் எட்டுத்தினங்கள் விடுமுறைநாட்களாகும். இப்பொழுது சனிக்கிழமைகளில் அரைநேரமும், ஞாயிற்றுக்கிழமைகளும் பௌர்ணமியான ஒரு போயா தினமும் விடுமுறையாகவுள்ளன, அதாவது மாதத்தில் ஏழு தினங்கள். வாரத்தில் ஐந்தரை நாட்கள் இப்பொழுது வேலை நாட்களாக இருப்பது இனி வாரத்தில் ஐந்து நாட்களே அரசாங்க வேலைநாட்களாக இருக்கும்.

வாரத்துக்கு ஐந்துநாள் வேலைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னைய கூட்டு அரசாங்கத்தில் நிதிமந்திரியாகவிருந்த டாக்டர் என். எம். பெரேராவும் யோசனை தெரிவித்திருந்தார். போயா தினங்களை விடுமுறையாக்க வேண்டுமென்ற யோசனையும் அப்போதே இருந்தது. ஞாயிற்றுக்கிழமைகளையும் போயா தினங்களையும் எப்படி விடுமுறை தினங்களாக்குவதென்பதில்தான் சிறிது சிக்கல் இருந்தது. போயா தினங்களை விடுமுறை நாட்களாக்கி வாரத்துக்கு ஐந்துநாள் வேலைத்திட்டத்தையும் அரசாங்கம் கொண்டுவந்திருப்பதை எதிர்க்கட்சிகளும் வங்கி முதலிய வர்த்தக ஸ்தாபனங்களும் ஆட்சேபம் கிளப்புவதற்கு இடமில்லை. பௌத்தர்களுக்கு முக்கியதினமான போயாதினங்களையும் கிறிஸ்தவ, கத்தோலிக்க மக்களுக்கு முக்கிய தினமான ஞாயிற்றுக்கிழமைகளையும் விடுமுறை நாட்களாக்கியதால் பௌத்தர்களுக்கும் கிறிஸ்தவ, கத்தோலிக்க மக்களுக்கும் வெள்ளிக்கிழமைகளில் முஸ்லிம்களுக்கு மதவழிபாட்டுக்காக இரண்டு மணி நேரமும் ஓய்வளிப்பதால் முஸ்லிம் சமூகத்துக்கும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை திருப்தியளிக்கும். இந்துக்களைப்பொறுத்தவரையில் அவர்களுக்கும் இந்த ஏற்பாட்டில் ஆட்சேபமிருப்பதற்கில்லை.

விடுமுறை தினங்கள் சம்பந்தமாக அரசாங்கம் செய்துள்ள இந்த முடிவு அரசியல்வாதிகளையும் அரசாங்க ஊழியர்களையும் திருப்தி செய்யலாம். ஆனால் பொதுமக்களுக்குத் திருப்தியளிக்கவேண்டிய பொறுப்பு அரசாங்க ஊழியரிடம் தான் உள்ளது. அரசாங்க ஊழியர்களுக்குப் பல சலுகைகள் உண்டு. இப்பொழுது விடுமுறை தினங்களும் அதிகரித்துள்ளன. அரசாங்க காரியாலயங்களில் எந்த ஒரு வேலையையும் தாமதமில்லாமல் செய்யக்கூடிய நிலை இல்லையென்பது பொதுமக்கள் மத்தியில் நிலவும் பொதுவான புகார். இனி விடுமுறை தினம் அதிகரிக்கப்பட்டதும் அதிக தாமதம் ஏற்படுமென பொதுமக்கள் அஞ்சக்கூடும். இதற்கு இடம் கொடுக்காமல் பொதுமக்களே தங்கள் எஜமானர்கள் என்பதை அரசாங்க ஊழியர் ஒவ்வொருவரும் உண்மையாக உணர்ந்து தங்கள் கடமையைச் சுறுசுறுப்பாகவும் சரியாகவும் தவக்கமின்றி நிறைவேற்ற வேண்டும்.

---

சோமசுந்தரப்புலவர்

# ஈழம் தந்த ஒளிவிளக்கு

— புலவர் தமிழ்மாறன் —

**அந்நிய மோகத்தில் அமுங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டியெழுப்பிச் செந்தமிழைச் சுவைக்கச்செய்த செம்மல் சோமசுந்தரப்புலவரின் நினைவு நாள் இன்றாகும். இதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

எம் தமிழகத்திலே எத்தனையோ ஆயிரம் ஒளிவிளக்குகள் குடிசையிலே தோன்றி ஒளி வீசி எவருக்கும் தெரியாமல் மறைந்து விடுகின்றன. இந்த விளக்குகளைக் குன்றிலேற்றி இலைகளின் ஒளியை உலகத்துக்கு அளிக்கும் பயன்படுத்துவார் எவருமில்லை. இவ்வாறு நாம் மறந்துவிட்டவர்களில் காலப்புயலையும் கடந்து ஒளிவீசும் கவிதைகளைத் தந்த நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் ஒருவர் ஆகும். எமது புலவர் முதுமைகளிற் சிறக்கவற்றை ஏற்றார். புதுமைகளிற் சிறந்தவற்றை ஏற்றார். இரண்டிற்கும் தொடர்பை ஏற்படுத்தினார். இதனால் இரு பக்கத்தாரையுமே தம் பக்கம் ஈர்த்தார். இதற்கு சிலர் மணிவாசகர் திருவாசகத்தையொட்டி நம் தமிழன்னைமேல் பாடிய திருவாசகம் சான்று. இத்திருவாசகம் மாணிக்கவாசகரின் திருவாசகத்தைப் போலவே திருப்பள்ளியெழுச்சி முதலாக பல துறைகளைக் கொண்டு இலங்குகிறது. இதுவரையில் எழுந்த நூல்களெல்லாம் இறைவனை பாடுவதாயிருந்தனவேயொழிய, எம் தமிழன்னையைப் பாடுவதாயில்லை. அக்குறையை நீக்க எழுந்த முதல் நூல் நமது சோமசுந்தரப் புலவரின் தமிழ்த் திருவாசகம் (நாமகள் புகழ்மாலை என்ற பெயரில் வெளிவந்துள்ளது) என்றால் மிகையாகாது.

இனி நமது புலவர் இலங்கை வளத்தை எப்படி படம் பிடித்துக் காட்டுகிறார் என்று பார்ப்போம். இலங்கை மக்கள் குளித்து இன்புறுவதற்கென்று ஏழு வெந்நீர்க் கிணறுகள் இருக்கின்றன. இவைகள் கவியாய் என்னுமிடத்திலுள்ளன, இக்கிணறுகள் அருகருகே காணப்பட்டாலும் வெப்பத்தால் வேறுபட்டுள்ளன. இக்கிணறுகளில் குளித்தார் நமது புலவர், ஒவ்வொரு கிணறுகளிலும் குளித்தார். ஒவ்வொரு விதமான உணர்ச்சிகளை அனுபவித்தார். அவ்வுணர்ச்சிகளைப் பாடலில் அமைக்க முன்வந்தார். அதே நேரத்தில் தாம் வாழும் உலகத்தையும் மறந்தாரல்லர். காதலனைப் பிரிந்த காரிகை முதலாக அழுக்காறுடையவன் ஈறு நிம்மதியற்றுத் தவிக்கும் மக்களைக் கொண்டதே நமது சமுதாயம். இவர்கள் மூன்று நாழியுண்டு மூயது நாழிகை உறங்குகிறார்களா? இல்லவே இல்லை. இவர்களின் மனம் தழுறும் எரிமலைபோல எந்நேரமும் கொதித்துக் கொண்டேயிருக்கும். இத்தகைய மக்களைக் கொண்ட இன்றைய உலகத்தையும் படம் பிடித்துக் காட்ட எண்ணினார். ஏழுவித மனிதர்களின் உள்ளக் கொதிப்பை வெந்நீர்க் கிணறுகளின் வெப்பத்திற்கு உவமையாக்கினார். கிணறுகளைக் காட்டினார்; இன்றைய உலகத்தையும் காட்டினார். ஒரே கல்லில் இரு மாங்கனி கிடைத்தது. அதையுண்ட மகிழ்ச்சியில் அவர் திளைத்திருக்க நாம் அவருடைய கவிதையை உண்டு களிப்போம்.

காதலனைப் பிரிந்தவளின்
மனம்போல ஒன்று
கவி பாடிப் பரிசு பெறான்
மனம்போல ஒன்று
தீது பழி கேட்டவன் தன்
மனம்போல ஒன்று
செய்த பிழைக்கு அழுங்கு[மவன்]
மனம்போல ஒன்று
நீதிபெறு ஏழைத் துயர்
மனம்போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள்
மனம்போல ஒன்று
காதுமனக் காறுடையான்
மனம்போல ஒன்று
கனலேறும் எழுநீர்கள்
உண்டு கவியாயில்

ஈழத்து மலைகளிலே அருவிகள் ஊற்றெடுத்தோடுகின்றன. இந்த எழில்மிகு காட்சியைக் காண்கிறார் கவிஞர். அவர் உள்ளத்திலும் கற்பனை ஊற்றுகள் ஊற்றெடுத்தோடுகின்றன. பல்வகைப் பாக்கள் பிறக்கின்றன. பதங்கைய மலையருவி பாய்கிறது. எப்படிப் பாய்கிறது? புத்தர் செய்த தவத்தைப் புவுலகிற்குப் பரப்புவது போல் பாய்கிறது. பேதுரு மலையருவி ஓடுகிறது. எப்படி ஓடுகிறது? யேசு பெருமான் யூதேய நாட்டு மக்களுக்கு வசித்த மலைச் சொற்பொழிவு போல், ஈழத்தை வளமாக்க ஓடுகிறது. கதிரைமலையருவி வருகிறது. ஆறுமுகநாவலன் கண்டனச் சொற்பொழிவு போல் கூகூ என்று ஓடிவருகிறது என்றார் புலவர். அவர் ஒரு மதவெறியராயிருந்தால் இந்த இடங்களில் அப்பரையும், சம்பந்தரையும், ஆறுமுக நாவலரையும் உவமை காட்டியிருப்பார். அதைவிடுத்து யேசுவையும் புத்தரையும் ஆறுமுகநாவலரையும் காட்டியிருப்பது அவருடைய எம்மதமும் சம்மதமே என்ற பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது.

இதுவரையில் கிணறுகளைக் காட்டுவதன்மூலம் உலகத்தைக் காட்டி அருவிகளைக் காட்டுவதன் மூலம் சமய அறிஞர்களைக் காட்டி எம்மை மகிழ்வித்த புலவர்,

"புதர்மலர்க் காந்தளின்
விடப்பாம்பென்(று) அஞ்சி
புனிறுயின் எச்சரிக்க
அணில்தந்தி புகல
வதியுமிள பூவையினம்
கேட்டுவாய் பொத்த
மலர்கின்ற பனிமுகுன்[டை]
மடல்கண்டு சிரிக்கும்"

என்ற பாட்டிலே இயற்கை நடத்துகின்றதோர் நாடகத்தைக் காட்டுகின்றார். இந்நாடகம் 'தண்டலைமயில்களாட' என்று தொடங்கும் கம்பராமாயணப் பாடலில் வருகின்ற நாடகத்தை நினைவூட்டுகின்றது.

இவ்வாறு இலங்கை வளத்தை எழிலுறக்காட்டிய புலவர்

"நாவிசிக்கு மூன்றால்
உணவு ஈய்ந்திடு
கனி சூழ்ந்த
வளமிகு இப்பதி
பூவிசித்து இருள்பொங்கும்
அருவியாய்ப்
போனதே எங்கள்
பொல்லாத காலமும்"

என்றதனில் இக்கால இழிநிலையையும் காட்டத் தவறவில்லை.

இனி அறிவுடையவர்களுக்கு மட்டும் அவர் விருந்தளிக்கவில்லை. இக்காலக் கவிஞர்களைப்போல் இளஞ் சிறுவர்களுக்கும் விருந்தளிக்கிறார், 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை' என்று ஆடிக் கூத்தடிக்கச் சிறுவர்களை அழைக்கிறார். சுத்தரித்தோட்டத்து வெருளியைக் கவினுறப்பாடி சிரிக்க வைக்கிறார். கொல்லாமையை விளக்கும் நீலன் கதையில் குடிப்பிறப்பால் ஒருவன் தாழ்ந்தவனாயிருந்தாலும் கொண்டொழுகும் ஒழுக்கத்தால் ஒருவன் உயர்ந்தவனாவான் என்ற சீர்திருத்தக் கருத்தைச் சிறப்பாகச் சொல்கிறார். இதுமட்டும் யாழ்ப்பாணத்திலே இன்றும் சில இடங்களில் நடைமுறையிலிருந்து வரும் உயிர்ப்பலியை, கோழிகளையும் ஆடுகளையும் கோவில்களிலே வெட்டிக்குவிக்கும் கொடுமையை ஓர் ஆட்டின் புலம்பலிலே வைத்துச் சாடுகிறார்.

"சைவமும் இல்லையோ
சான்றோரும் இல்லையோ
தெய்வமும் இல்லையோ
என்மனது தேற்றுடவே"

என்ற அந்த ஆடு புலம்புகின்ற புலம்பல் மதுரைமாநகரத்திலே ஒருகாலத்தில் ஒலித்த,

"சான்றோரும் உண்டுகொல்
சான்றோரும் உண்டுகொல்
ஈன்ற குழவி
எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோர் உண்டுகொல்
சான்றோரும் உண்டுகொல்
தெய்வமும் உண்டுகொல்
தெய்வமும் உண்டுகொல்
வையவாளில் தப்பிய
மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்
தெய்வமும் உண்டுகொல்"

(6-ம் பக்கம் பார்க்க)

---

## ஐயாறன் எழுதுவது

நயினாதீவிலிருந்து ஓர் 'அர்ஜண்ட்' அழைப்புக் கிடைத்தது. உடன் புறப்பட்டு வருமாறு ஸ்ரீ நாகபூஷணி அம்மை ஓர் அன்பர் மூலம் உத்தரவு போட்டார். திருவிழாவுக்குச் செல்லவேண்டுமென்றும் தேர் பார்க்கவேண்டுமென்றும் மனதுக்குள் அதிக ஆசை. உத்தரவு கிடைத்ததும் உடனே புறப்பட்டுவிட்டேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு வழி வசதியாகவுள்ளது. அங்கு படகு ஏறும் துறைக்குப் பக்கத்தில் யாத்திரிகர்களுக்காகப் பந்தல் போட்டிருக்கிறார்கள். ஒன்றரை மணிக்கு ஒரு முறை படகு செல்கின்றது. ஆண், பெண், சிங்கள பௌத்தர்களும் யாத்திரையாக வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலேயே அடைத்துக் கிடப்பவர்களுக்கு இந்தக் கடல் யாத்திரை எவ்வளவு சுகமாகவும் இன்பமாகவும் இருக்கிறது தெரியுமா?

ஃ ஃ ஃ

அம்மனின் அழகான புதுக் கோபுரம் தூரத்தில் வரும்போதே நம் மனதை வசீகரித்து "வருக வருக" என்று அழைக்கின்றது. நயினாதீவுக்குப் பக்கத்திலே கடலில் ஒரு சிறிய கப்பல் நங்கூரம் பாய்ச்சி இருந்ததைக் கண்டேன். இதைப்பற்றி விசாரித்ததில் சில ருசியான தகவல் கிடைத்தது.

அமெரிக்காவிலிருந்து, சில மிஷனரிமார்கள், தங்கள் மதத்தைப்பற்றி பிரசாரம் செய்ய இக்கப்பலில் சுமார் 3 வருடங்களுக்கு முன்பே இங்கு வந்து, தீவுதீவாகப் பிரசாரம் செய்வதாயும், தீவு மக்களை தங்கள் படகில் கப்பலுக்கு ஏற்றிச் சென்று தங்கள் மதம் சம்பந்தமான காட்சிகளைக் காட்டுவதுடன், துண்டுப்பிரசுரங்களைக் கொடுத்து, சமயப் பிரசாரம் செய்வதாகவும், அன்பர் தெரிவித்தார். எவ்வளவு தூரத்திலிருந்து தங்கள் மதத்தைப் பற்றி பிரசாரம் செய்ய எவ்வளவு பிரயாசை எடுக்கிறார்கள்!

ஃ ஃ ஃ

இவ்வளவு காலம் அக்கப்பலுக்குப் பழுது ஏற்பட்டிருந்ததால், காங்கேசன்துறைக்குப் பக்கத்தில் இருந்ததாம். இப்போது சரிபார்த்தபின், திருவிழாவை முன்னிட்டு நயினாதீவுக்கு வந்துள்ளதாயும், தீவில் இருந்து பிரசாரம் செய்ய ஓர் இடம் கிடைக்குமா என்று அவர்கள் விசாரித்துக் கொண்டிருப்பதாயும் அறிய வந்தேன். தீவில் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றும் கிடையாதா என்று கேட்டதற்கு, அங்கு ஒரு மாதா கோவில் இருப்பதாயும், ஆனால் சமீபகாலமாக அங்கு பிரசங்கம் பிரார்த்தனை நடக்கவில்லை என்றும் அன்பர் மூலம் அறிந்தேன்.

ஃ ஃ ஃ

காலை மணி 11 இருக்கும். கோவிலில் நல்ல கூட்டம். கலசம் வைத்து விசேஷ அபிஷேகங்கள் அம்மைக்கு மந்திர கோஷங்களுடன் நடந்தன. தீபாராதனை தரிசனமானதும், கடைக்கண்ணால் என்னைப் பார்த்து, புன்முறுவல் பூத்தார். அழைத்த காரணத்தைக் கேட்டேன். அங்கு யாத்திரிகர்களுக்கு அன்னதானம் ஆரம்பமாவதாயும், புது மண்டபம் கட்டப்படுவதாயும் அதையெல்லாம் நேரில் வந்து பார்த்து அதிகமானவர்களை திருவிழாவுக்கு வருமாறு எழுதும்படியும் கூறினார்.

சென்ற 6 வருட காலமாக அங்கு திருவிழாக் காலத்தில் அன்னதானம் நடந்துவருகிறது. வருஷத்துக்கு வருஷம் அன்னதான கைங்கரியம் விரிவடைந்து, இப்போது நிரந்தரமான மண்டபமும் கட்டப்பட்டுவருவதைப் பார்த்தேன். வந்தவர்களுக்கெல்லாம் உண

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஊட்டுகிறான் அன்னை. பல அரிசி மூடைகளும், காய்கறிகளும் அன்னதானத்துக்காக குவிந்துள்ளன.

திருவிழாக் காலத்தில் மட்டுமன்றி, தினசரி வரும் யாத்திரிகர்களுக்கும் உணவளிக்க, ஒரு யோசனை இருப்பதாகவும், சபை அன்பர் தெரிவித்ததைக் கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது.

ஃ ஃ ஃ

அன்னதானம் நடந்து, உயிர்கள் பசியின்றி வாழ்ந்தால் அங்கு மழை தட்டாமல் பொழியும். பயிர்கள் செழிக்கும். புரட்சி எண்ணங்கள் எழா. சாந்தியும் சுபிட்சமும் நிலவும். அதற்கான முறையில் அன்னதானப் பணியை உற்சாகத்துடன் நயினை அன்பர் செய்வதைக் கண்டேன். வெளியூர் அன்பர்களும் வரவர அதிகமாக இதற்குப் பொருளுதவி செய்வதை அறிய மிக மகிழ்ச்சியாக இருந்தது.

எனது உள்ளப் பசியையும் அம்மை தீர்த்து, வந்தவர்களுக்கெல்லாம் கேட்ட வரங்களையெல்லாம் அளித்து அனுப்பிவைத்தார். நம் தாயிடம் சென்று திரும்புகையில் எவ்வளவு மனத்திருப்தி!

ஃ ஃ ஃ

பிறையூருஞ் சடைமுடியெம் பெருமானூர் பெரும்பற்றப் புலியூரும் பேராவூரும், நறையூரும் நல்லூரும் நல்லாற்றூரும் நாலூருஞ் சேறூருங் காரையூருஞ், உறையூரும் ஒத்தூரும் ஊற்றத்தூரும் அளப்பூரோ மப்புலியூ ரொற்றியூரும், துறையூருந் துவையூருந் தோழூர் தானுந் துடையூருந் தொழ இடர்கள் தொடரா வன்றே.

— அப்பர் சுவாமிகள்

# பூமிதியன் தலைமையில் அல்ஜீரியாவில் புரட்சி அரசாங்கம்

## பென் பெல்லாவின் இருமந்திரிகள் புரட்சிசபையில் இடம்பெற்றனர்

அல்ஜீயர்ஸ், ஜூலை 6

அல்ஜீரியாவில் கேர்னல் பூமிதியன் தம்மைத் தலைவராகக்கொண்ட புரட்சிசபை ஒன்றை நிறுவியிருக்கிறார். இந்தச் சபை அல்ஜீரியாவை ஆட்சிசெய்யும். புரட்சிசபையில் தலைவருட்பட 26 பேர் அங்கம்வகிக்கின்றனர். சபையின் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் ராணுவத்தினர். பென்பெல்லாவின் அரசாங்கத்தில் வெளிவிவகார மந்திரியாகப் பதவிவகித்தவரும், தொழில்மந்திரியாகப் பதவிவகித்தவரும் புரட்சி சபையில் இடம்பெற்றுள்ளனர்.

முன்னுள் பிரதமர் பெர்ஹாட் அப்பாஸ, முன்னுள் உதவிப் பிரதமர் காஸிம் போன்றவர்கள் புரட்சிசபையில் இடம் பெறவில்லை. பென்பெல்லாவுக்கு எதிராக ஓரான் மாகாணத்தில் புரட்சிக்குத் தலைமை தாங்கிப் பின்னர் சென்ற ஏப்ரல் மாதத்தில் இராணுவ நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டுப் பென்பெல்லாவினுல் ஆயுள்தண்டனையாக்கப்பட்ட ஒரு மேஜரும் புரட்சி சபையில் இடம்பெற்றுள்ளார்.

அல்ஜீரிய விடுதலையின் மூன்ருவதாண்டு தினத்தையொட்டி கேர்னல் பூமிதியான் நேற்று ரேடியோவில் உரைநிகழ்த்துகையில் புரட்சிசபை அமைப்பு பற்றித் தெரிவித்தார்.

அல்ஜீரியாவின் உள்நாட்டு விவகாரத்தில் வெளியார் எவரும் தலையிடுவதை அல்ஜீரிய அரசாங்கம் அனுமதிக்கமாட்டாதென்று கேர்னல் பூமிதியான் தெரிவித்தார். ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடும் சகல நாடுகளுடனும் அல்ஜீரியா ஒத்துழைக்குமென்றும் அவர் சொன்னுர். உள்நாட்டுக் கொள்கையில் தீவிர சீர்திருத்தம்செய்யப்பட வேண்டுமென்றும் இதைப் புரட்சிசபை செய்யுமென்றும் அவர் சொன்னுர். ஆசிய-ஆபிரிக்க உச்சிமகாநாடு ஒத்திவைக்கப்பட்டதுபற்றி கேர்னல் பூமிதியான் குறிப்பிடுகையில் திட்டமிட்டபடி நவம்பர் மாதத்தில் ஆசிய-ஆபிரிக்க உச்சிமகாநாடு நடைபெறுமென்றும் அவர் சொன்னுர்.

மண்டல சார்பற்ற நடுநிலைமைக் கொள்கையே அல்ஜீரியாவின் வெளிவிவகாரக் கொள்கையென்றும் கேர்னல் பூமிதியன் கூறினுர்.

---

### பெருவில் அவசரநிலை!

லிமா ஜூலை 6

பெருநாட்டில் ஓரளவு அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு கலகம் தோன்றியிருப்பதாகவும் இதனுல் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்கவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பெருஅரசியல் சாஸனம் ஒரு மாதகாலத்துக்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

### ஆஸ்பத்திரிகள் தேசிய மயம்

ரங்கூன் ஜூலை 6

பர்மாவில் நான்கு தனியார் ஆஸ்பத்திரிகளைப் பர்மிய அரசாங்கம் தேசிய மயமாக்கியுள்ளது. இவற்றில் ஒன்று ரங்கூனிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச்சேர்ந்த ஆஸ்பத்திரியாகும். இதர மூன்று ஆஸ்பத்திரிகளும் அமெரிக்கமிஷனைச் சேர்ந்தவை.

### சிலைகள் கண்காட்சி

ஹாம்பர்க் (டாட்), ஜூலை 6

சமீபத்தில் ஹாம்பார்க் நகரில் நடைபெற்ற இந்திய மரச் சிலைகள் கண்காட்சி நடந்தது. அழகிய சின்னஞ்சிறிய மரச் சிலைகளான இவை பெரும்பாலும் தென்னிந்தியாவிலிருந்தும், மத்திய இந்தியாவிலிருந்தும் கொண்டுவரப்பட்டவை. பல வாரங்களுக்கு இக்கண்காட்சி நடந்தது. இந்திய கலைக்கு மேற்கு ஜெர்மனியில் இருந்து வருகிற மதிப்புக்கு இந்த கண்காட்சி ஒரு எடுத்துக்காட்டு.

### கோமகனின் கருத்து

#### பிரி. பார்லிமெண்டில் வரும் பிரேரணை

லண்டன், ஜூலை 6

ரொடிஷிய அரசியல் நிலை பற்றி எலிஸபெத் ராணியின் கணவர் எடின்பரோ கோமகன் வெளிப்படையாக கருத்துத் தெரிவித்ததை மறைமுகமாகக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு இருபது எம். பீக்கள் பிரிட்டிஷ் காமன்ஸ்சபையில் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

சர்ச்சைக்குரிய விஷயங்களில் அரச குடும்பத்தினர் வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் கருத்துத்தெரிவிக்கலாகாது என்று அந்தப் பிரேரணை கூறுகிறது.

---

### வெள்ள அபாயம்

பெல்கிரேட், ஜூலை 6

வடக்கு யூகோஸ்லேவியாவில் வெள்ள அபாயம் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது அணைக்கட்டுகள் உடைப்பெடுத்துள்ளன.

---

### ஒருகட்சி ஆட்சி

தாருஸ் இஸ்லாம் ஜூலை 6

தன்ஸானியா ஒரு கட்சி ஆட்சி ராஜ்யமாகியுள்ளது. இப்போதுள்ள இரு கட்சிகளும் ஒன்றாக இணைகின்றன.

---

### பிரெஞ்சு ராக்கெட்

பாரிஸ், ஜூலை 6

பிரான்ஸ் நேற்று இரண்டு கட்ட ராக்கெட் ஒன்றை விண்வெளியில் செலுத்தியது.

---

### கி. மு. சங்கம் எம்.பி.க்கு வரவேற்பு

கிளிநொச்சி, செவ்வாய்

"கிளிநொச்சித் தொகுதியை ஒரு பின்தங்கிய தொகுதியாக முன்னைய அரசாங்கம் புறக்கணித்து வந்தது. ஆனுல் இன்றைய அரசாங்கம் எமது தொகுதிக்குத் தேவையான ஆக்கவேலைகளைச் செய்வதற்கு முன்வந்துள்ளது" என்று கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கணேசபுரம் கிராமமுன்னேற்றச்சங்கம் தமக்களித்த வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. அ. எட்வேட்டின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மற்றும் திரு. வ. த. அழகரத்தினம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு கே. கந்தசாமி, திரு. ப குணரத்தினம், திரு. கு. நடராசா ஆகியோரும் பேசினர்.

### "பலதுறையிலும் தொண்டர்"

யாழ்ப்பாணம், புதன்

"அமரர் வீரசிங்கம் தனிப்பண்பு படைத்தவர். இத மானிடர் ஒரு சிலருக்கே உரியது. இவரின் சேவைப்பண்பு அன்புத்திறன் யாவற்றையும் தனித்தனி இலகுவாகக் கூறிவிடமுடியாது. தமது நாமத்திற்கேற்ப 'வீரசிங்கமாகவே' எல்லாவற்றிலும் திகழ்ந்தார் இவர் கல்வித் தொண்டுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. சொல்லில் அடங்காத சமூகத் தொண்டு, சமயத் தொண்டு கூட்டுறவுத் தொண்டு. ஆகியன ஆற்றிய பெரியார் அவர்." என்று சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் தலைவருமான திரு இ இராசரத்தினம் மனிபாய் இந்துக்கல்லூரி ஸ்தாபக தின விழாக் கொண்டாட்டத்தில் மேற்படி கல்லூரியின் முன்னுள் அதிபரான காலஞ்சென்ற திரு வீ. வீரசிங்கத்தின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

யாழ்ப்பாணத்திலும், தென்னிலங்கையிலும், அயல் நாடுகளிலும் வீரசிங்கம் கூட்டுறவாளன் என்ற அழியாதபுகழ் பெற்ளுர். உத்தியோகத்திலிருந்த காலத்தில் இவர் ஓர் கௌரவ கூட்டுறவாளனுகத் தொண்டாற்றினுர். வடகிழக்கு மாகாணங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு சம்மேளனம் அமைக்கும்போது வீரசிங்கத்தின் ஆர்வத்தையும் நேர்மையையும் கண்டு அவரை முதல் முறையாகத் தலைவராகத் தெரிவுசெய்தார்கள்.

---

### 'டிங்கி' ஜுரம் பரவுகிறது

கொலன்னாவ, செவ்

கொலன்னாவ, வியாரகல, யூறகல பகுதிகளில் 'டிங்கி' ஜுரம் தீவிரமாகப் பரவிவருவதாக அஞ்சப்படுகிறது. கொலன்னாவ நாட்புறங்களில் இக்கோர ஜுரத்தால் கடந்த மூன்றுவாரத்தில் பத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதுவரை பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் ஆனுல் உரிய மருந்துகள் இல்லததால் பூரண சுகப்படுத்த முடியவில்லையெனவும் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவ்வட்டாரத்தில் தற்போது கொசுக்களின் தொல்லை அதிகமாதலால் இச்ஜுரம் மேலும் பரவலாம் என தெரிகிறது. இக்கொசுக்களை அழிக்க கொலன்னாவ வைத்தியப் பிரிவு முக்கிய கவனம் எடுத்துள்ளது.

---

### பாம்பு தீண்டி மரணம்

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சிகாவகாம் வாய்க்காலைச் சேர்ந்த சின்னச்சாமி முனுசாமி என்பவர் வயலில் வேலைசெய்துகொண்டிருந்தசமயம் பாம்பினுல் தீண்டப்பட்டு மரணமானுர். இவர் ஏழு பிள்ளைகளுக்கு தந்தையாவார். வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டும் பயனளிக்கவில்லை.

### ஆசிரிய சங்கக் கிளை அங்குரார்ப்பணம்

செக்கிராவ, செவ்

வடமத்தியமாகாண, அகில இலங்கை அரசினர் தமிழ் ஆசிரிய சங்கக்கிளை, அங்குரார்ப்பணம் செக்கிராவ பட்டிகட மிஷன் தமிழ்ப்பாடசாலையில், அகில இலங்கை அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. நா. கந்தையாவின் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது தலைமையுரையில் சங்கத்தின் சாதனைகளை விளக்கியும் ஆசிரியர் இடமாற்றவஷயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையிடுவதில்லை என்று உறுதி அளித்துள்ளதாகவும் கூறினுர்

வடபகுதி உதவிவித்தியாதிபதியையும் தலைமைக்காரியாலயத்துப் பதில் வித்தியாதிபதியையும் சங்கம் பேட்டி கண்டதாகவும், 1-8-65ல் 200க்கு மேற்பட்டோருக்கு வடமாகாணத்திலிருந்து வெளிமாகாணங்கட்கு மாற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளார்கள் எனவும், மாற்றம்சம்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த 17-7-65-ல் பேட்டியளிக்கதற்குக் கௌரவ கல்வி அமைச்சர் இணங்கியுள்ளதாகவும் மேலும் அவர் கூறினுர்.

வடமத்தியமாகாண அ. இ. அ. த. ஆசிரிய சங்கக் கிளைத் தலைவராக திரு. ச செல்வநாயகமும், செயலாளராக திரு. நா. செ. நாகரத்தினமும், பொருளாளராக திரு அ. சந்திரசேகரமும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

### உபசாரவிழா

கோண்டாவில, செவ்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு திருச்செல்வத்துக்கு, கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளைக்கும் கோப்பாய்த் தொகுதி மக்களால் வரவேற்புபசாரம் ஒன்றளிக்கப்பட்டது.

கோப்பாய் வடக்கில் வன்னியசிங்கம் அரங்கில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. க. நாகலிங்கம் தலைமை வகித்தார். இருபாலைச்சந்தியில் இருந்து மந்திரியும் அமைச்சர்களும் கூட்டமைதானத்துக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். திருவாளர்கள் திருச்செல்வம், கதிரவேற்பிள்ளை ஆகியோருக்கு வரவேற்புப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன.

கூட்டத்தில் திருவாளர்கள் வி. என். நவரத்தினம், வி தர்மலிங்கம், மு. ஆலாலசுந்தரம் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

---

### நகைத் திருட்டு வழக்கு

சாவகச்சேரி, செவ்வாய்

மீசாலையைச் சேர்ந்த கார்த்திகேசு ஆறுமுகம் என்பவருடைய வீட்டில் 1500 ரூபா பெறுமதியான நகைகளையும் பணத்தையும் திருடியதாக மந்துவிலைச் சேர்ந்த எஸ். இராசையா, எஸ். சின்னத்துரை, கே. செல்வன் ஆகிய மூவர் மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு பி ஜெபோட்சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிபதி எதிரிகள் மூவரையும் தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து வழக்கை ஒத்திவைத்தார். எதிர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட திருட்டுப் போன ஒரு பகுதியை கோர்ட்டின் பாதுகாப்பில் ஒப்படைக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

### இரத்ததானம் செய்ய இளைஞர் முன்வரவேண்டும்

கோப்பாய், செவ்வாய்

"மக்களிடம் காணப்படும் பீதியே இன்று இரத்ததானம் செய்யாமலிருப்பதற்கு உரிய காரணமாகிறது. உடம்பில் எஞ்சியுள்ளதான இரத்தம் தான் இரத்ததானத்திற்கு ஏற்கப்படுகிறதென்பதை நம் மக்கள் உணருகிறர்களில்லை" என்று பத்தமேனி இளைஞர் முன்னேற்றக் கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கோப்பாய் சுகாதாரப் பொறுப்பதிகாரி திரு. கே. சி. முத்தையா குறிப்பிட்டார்.

"இன்று யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான இரத்தத்தைப் பெறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. சிங்களமக்கள் இரத்ததானம்செய்யத் தாமாகவே முன்வந்துள்ளனர். அவர்களிருந்தே நம்தேவையைப் பூர்த்திசெய்ய இரத்தத்தைப் பெறுகின்றோம் ஏன் இந்த நிலை நமக்கு ஏற்படவேண்டும். வாலிபர்களாகிய நீங்களே இரத்ததானம் செய்யவும் ஏனையோரைத் தூண்டவும் முன்வரவேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். கூட்டத்தில மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

---

### சாரணர் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணப் பட்டினம், தென்மராட்சி ஆகிய பகுதிகளிலுள்ள சாரண அணித்தலைவர்களுக்குப் பயிற்சியளிக்கும் முகாமொன்று கைதடி ஆங்கில பாடசாலையில் கடந்தவாரம் நடைபெற்றது. இதில் 95 அணித் தலைவர்கள் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பரமேஸ்வராக்கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், வைத்தீஸ்வர வித்தியாலயம், கடற்படைச் சாரணர், கொக்குவில் இந்துக்கல்லூரி, இராமநாதன் மகாவித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம், கணேச வித்தியாலயம் ஆகியன பங்குபற்றின. திரு ஆர். ஐ இராசநாயகம் தலைமையில் பயிற்சி நடைபெற்றது. பயிற்சி முடிவில் அணித் தலைவர்களுக்குத் தராதரப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

---

### வைத்திய அதிகாரிக்கு பிரியாவிடை

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் பிரதம வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் மூ. வேதாரணியம் மேற்படிப்புக்காக கொழும்பு செல்கிருர் இவரது சேவைநலம் பாராட்டி வலிகாமம் வடக்குப்பகுதி மக்கள் பிரியாவிடை வைபவமொன்றை இம்மாதம் 24-ம் திகதி மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

---

### மந்திரியின் விஜயம்

சாவகச்சேரி, புதன்

இம்மாதம் 24-ம் திகதி "யுனேஸ்கோ" ஸ்தாபனத்தாரின் ஆதரவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பாடசாலைகளுக்கிடையேயான இசை, நடன விழாவில் கலந்துகொள்வதற்காக உத்தியோக பூர்வமாக விஜயம் செய்யும் கல்வி மந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ இரியகொல்லை அன்று மாலை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## "மொழிப்பிரச்னையே முக்கிய பிரச்னையாகும்"

சுழிபுரம், செவ்

"தமிழன் பதவியை அல்ல உரிமையைத்தான் பெறவிரும்புகின்றான் என்பதை தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்ததன்மூலம் நாம் நிலை நாட்டியுள்ளோம். தமிழ்பேசும் மக்கள் எம்மை ஒரு கட்சியின் கீழ ஒற்றுமையாக தெரிவு செய்ததால்தான் நாம் சில கோரிக்கைகளை தேசிய அரசாங்கத்திடம் சமர்ப்பித்து இந்த அரசாங்கத்தை அமைக்கமுடிந்தது" என திரு. எஸ் ஜே.வி செல்வநாயகம் பண்டத்தரிப்பு மக்களால் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு திருச்செல்வத்துக்கு அளித்த பொது வரவேற்பு வைபத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டார் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெற்ற வைபவத்துக்கு பண்டத்தரிப்பு கிராமசபை தலைவி திருமதி பேனி அத்தனாசியார் தலைமைவகித்தார், மந்திரியும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஊர்வலமாக விழா மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அமைச்சர் மு. திருச்செல்வம் கியூ. சி. அவர்கள் பேசுகையில் "எமது முக்கியமான பிரச்னை மொழிப்பிரச்னையாகும் வேறு எப் பிரச்னை இருந்தாலும் மொழிப்பிரச்னையையே நாம் முதல் தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்த நாட்டில் தமிழ்மொழிக்கு கிடைக்க வேண்டிய அந்தஸ்தை பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் உட்பட வேறு பலரும் கூட்டத்தில் பேசினர்.

---

கொழும்பு

## மாநகரசபைப் பகுதி விஸ்தரிக்கப்படும்

புத்தளம், செவ்

தற்பொழுதுகொழும்பு மாநகரசபைப்பகுதிக்கு வெளியில் இருக்கும் களனி, வத்தளை கொலன்னாவை, தலுகம பகுதிகளை கொழும்பு மாநகரசபை அதிகாரத்துக்குள் கொண்டுவருவதற்காக அமைச்சர் திருச்செல்வம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அமைச்சரின் திட்டப்படி, மேற்படி பகுதிகள் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் வந்தாலும் அப்பகுதிமக்கள் இப்பொழுதிலும்பார்க்க மேலதிக வரிகளை செலுத்தவேண்டியிராது. தண்ணீர்வசதி கொண்ட இந்த உப பட்டினங்கள் விரைவில் அபிவிருத்தியடையச் செய்யவேண்டுமென்பதே அமைச்சரின் திட்டமாகும்.

## புன்னாலைக் கடல் நன்னீர்வாவியாகும்

யாழ்ப்பாணம் செவ்

முனாய்-காரைநகர்ப் பகுதியை இணைப்பதும் தீவுப் பகுதிகளின் கரைகளையுடையதுமான புன்னாலை சிறுகடலை நன்னீர் வாவியாக்கி விவசாயத்துக்குப் பயன்படுத்தும் திட்டம்பற்றிய விரிவான மகஜர் ஒன்றை தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம், விவசாய நீர்ப்பாசன மந்திரிக்கு சமர்ப்பித்துள்ளதாக அறியப்படுகிறது.

புன்னாலை சிறுகடலை பெருங் கடலுடன் கலக்குமிடத்தில் தடுத்து அதை மழைநீர் தேங்கும் நன்னீர் வாவியாக்குமிடத்து அந்நீரை தீவுப்பகுதிகளின் விவசாயத்துக்குப் பயன்படுத்த முடியுமென்று மேற்படி மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது தவிர இத்திட்டத்தின்மூலம் தீவுப்பகுதிகளின் நீண்டகாலப் பிரச்னையாக இருந்துவரும் நீர்ப்பிரச்னையும் தீர்க்கப்பட முடியுமெனக் கருதப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அமைச்சினால் இத்திட்டம் விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் இதுபற்றி அமைச்சின் விரிவான ஓர் அறிக்கை விரைவில் வெளிவரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது நிறைவுவிழா

யாழ்ப்பாணம், புதன்

"அரை வயிற்றை நிரப்புவதற்காக உழைத்துப் பிழைக்கும் ஏழை மக்கள் அனைவரும் தேசிய அரசாங்கத்தினால் நசுக்கப்பட்டு வரும் அதே நேரத்தில் பிரித்தானிய காலனி ஆட்சிக்காலத்திலை பலவித மான சலுகைகளை அனுபவித்த மேல்நாட்டு மக்களும் வெளிநாட்டு ஏகாதிபத்திகளும் நன்மைக்கு மேல் நன்மை பெறுகின்றனர்" என்று கம்யூனிஸ்ட்கட்சியின் 22-வது நிறைவுவிழாவில் பேசிய கன்னாகம் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத் தலைவர் திரு. என விஜயானந்தன் குறிப்பிட்டார்

சண்டிலிப்பாய் மடத்தடி மைதானத்தில் திரு இ இராசதுரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருவாளர்கள் எம் சி. சுப்பிரமணியம், டொமினிக்ஜீவா, என. நடராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## சம்பள உயர்வு பற்றி மந்திரி பதில்

### ஆசிரியவட்டாரங்களில் அதிருப்தி

யாழ்ப்பாணம், புதன்

பாடசாலை அதிபர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும் சிங்களத் தேர்ச்சி அவசியமில்லையென்று வடமாகாண ஆசிரியர் சங்கம், வடமாகாண அதிபர்கள் சங்கம், வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஆகியவை கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லைக்கு கூட்டுமகஜரொன்றை அனுப்பி வைத்திருந்தது.

சிங்களத் தேர்ச்சி இல்லையென்ற காரணத்துக்காக சில அதிபர்களினதும், தலைமையாசிரியர்களினதும் சம்பள உயர்வு நிறுத்திவைக்கப்பட்டதையும் மகஜரில் சுட்டிக்காட்டியது.

ஆனால் அதற்குப் பதிலாக கல்வியமைச்சிடமிருந்து வந்த கடிதத்தில் சம்பள உயர்வு, சட்டத்திற்கு அமைய வே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

தேசிய அரசாங்கம் பின்பற்றுவதாகக் கூறப்படும் கொள்கைகளுக்கு முரணாக அமைந்துள்ள மேற்படி பதில், ஆசிரியர் வட்டாரங்களில் பெரும் அதிருப்தியைக் கொடுத்துள்ளதாக அறியப்படுகிறது.

---

## ஸ்தலஸ்தாபன கமிஷனராக நியமனம்

புத்தளம், செவ்

உதவி ஸ்தலஸ்தாபன கமிஷனராகக் கடமையாற்றிவந்த திரு. இராசேந்திரா, ஸ்தலஸ்தாபன அமைச்சினால், ஸ்தலஸ்தாபன அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்தலஸ்தாபன அதிபராகக் கடமையாற்றிய திரு. டபிள்யு. வி. டி. மகதந்திலாவ கொழும்பு அரசாங்க அதிபராக மாற்றப்பட்டதைத் தொடர்ந்தே இந்நியமனம் நடைபெற்றுள்ளது.

---

## பாராட்டுவிழா

பருத்தித்துறை, செவ்

வடமராட்சிப்பகுதிக் காரியாதிகாரியாக இருந்து திருமலைக்கு இடமாற்றம் செய்யப்பெற்றுச் செல்லும் திரு ஜே டி ஆனல்டுக்குபுலோலிகிழக்குஅரசினர் பாடசாலை மண்டபத்தில் பிரிவுபசாரம் ஒன்றளிக்கப்பட்டது. கிராமசேவகர் திரு எம் வி பாலசுந்தரம் தலைமைவகித்தார். தலைவர் தமது உரையில் கிராமதான விதிகள் அவரை என்றும் நினைவூட்டும் என்று கூறினார். புலோலி தெற்கு கிராமசேவையாளர் திரு செ ஜெகநாதன், திரு க இராசையா, திருமதி இராசசிங்கம்முதலான பலரும்பேசிய பின் பாடசாலை மாணவரதும் சனசமூக, கிராம முன்னேற்றச் சங்கங்களதும் நடன நடக இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## வைத்தியசாலைக்கு உபமின்சார நிலையம்

பருத்தித்துறை. செவ்.

புலோலி மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு கிடைத்து வரும் மின்சார விநியோகக் குறையை நிவர்த்தி செய்யுமுகமாக உடுப்பிட்டி எம். பி. திரு. மு சிவசிதம்பரம் மேற்படி வைத்தியசாலைக்கு உபமின்சார நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலனளித்திருப்பதாகத் தெரியவருகிறது'

இந்நிலையம் சுமார் 28 ஆயிரம் ரூபா செலவில் வைத்தியசாலை எல்லைக்குள் நிறுவப்படும் வேலைகள் ஜூலை மாத முற்பகுதியில் ஆரம்பமாகவிருப்பதாகக் கூறப்படுகிறது,

இந்த உபநிலையம் நிறுவப்படும் பட்சத்தில் புலோலி கிராம சபைப் பகுதிக்கும் இதன் மூலம் மின்சார விநியோகம் செய்ய வாய்ப்பு ஏற்படலாம் எனவும் கருதப்படுகிறது.

## ஆசிரிய பணியில் 37 வருடங்கள்

சுழிபுரம், செவ்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் முப்பத்தேழு வருடம் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெறும் திரு. வை. இராமசாமியின் சேவையைப் பாராட்டி கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பாராட்டு விழா வொன்று நடத்தப்பட்டது. பாராட்டுவைபவத்துக்கு கல்லூரி அதிபர் திரு. கா. வேலுப்பிள்ளை தலைமை வகித்தார். ஆசிரியர்கள் மாணவர்கள் சார்பில் வாழ்த்துப் பத்திரம் வாசித்து வழங்கப்பட்டது. ஆசிரியரின் சேவையை பாராட்டி திரு. சி, வயிரமுத்து திருமதி ம. இராசலிங்கம், மு பொன்னம்பலம், திரு. வே. வேலாயுதம்பிள்ளை ஆகியோரும் கல்லூரி மாணவர்களும் பேசினர். திரு. இராமசாமி பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப்பேசினார்.

---

## சர்வசமய காங்கிரஸ் யாழ். நகரில் கிளை

குரும்பசிட்டி, செவ்.

நாட்டு மக்கள் மத்தியில் தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்கும்நல்லுறவை ஏற்படுத்தி சமூக ரீதியில் தொண்டு ஆற்றவும் பல்வேறு சமயத் தலைவர்களினாலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சர்வ சமய காங்கிரஸின் கிளை யாழ்ப்பாணத்தில் வெகுவிரைவில் நிறுவப்படவிருக்கின்றது. அங்குரார்ப்பணக் கூட்டம் சம்பந்தமான ஏற்பாடுகள் செய்யும் வேலைகளை யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் திரு, கே, பரமோதயன் கவனித்துவருகின்றார். மாவட்ட ரீதியில் அமைக்கப்படும் முதலாவது கிளை யாழ். நகரில் நிறுவப்படவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வேல்விழா

பம்பலப்பிட்டி, செவ்.

இவ்வருட வேல்விழா அடுத்தமாதம் 10-ம் திகதி தொடக்கம் 14-ந் திகதிவரை நடைபெறும்என அறிவிக்கப்பட்டுள்ளது. வேல் இரதம், செட்டியார்தெரு பழைய கதிரேசன் கோவிலிலிருந்து 10-ந் திகதி புறப்பட்டு, பம்பலப்பிட்டிக் கோவிலை அன்றிரவு 7 மணிக்கு வந்தடையும். 11-ந் திகதியும் 12-ந் திகதியும் வேல்ரதம் பம்பலப்பிட்டிக் கோவிலில் பக்தர்கள் தரிசனத்திற்காக நிறுத்தப் பட்டிருக்கும்,

வேல் இரதம் 15-ந் திகதி திகதி மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டிக் கோவிலிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை செட்டியார்தெரு பழைய கதிரேசன் கோவிலை வந்தடையும்.

---

## வெங்காய வழக்கில் எதிரிகள் விடுதலை

சாகச்சேரி, செவ்.

உணவுக்கட்டுப்பாட்டதிகாரியின் அனுமதியின்றி 119 மூடை பெரியவெங்காயத்தை ஆனையிறவு தடைதாண்டியூடாகக் கடத்திச் சென்றதாக கே தம்பிராஜா, கே சிங்கராசா ஆகிய இருவர் மீதும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு பீ. ஜெபேர்ட் சில்வா எதிரிகளைக் குற்றவாளிகளல்லவெனக் கண்டு விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் வி. என். நவரத்தினம் ஆஜரானார்.


REGAL - JAFFNA
NOW SHOWING
Richard Basehart
in
HITLER



இரவில் இன்னல் நேராமல்
பாதுகாத்துக் கொள்ளுங்கள்

பிரகாசம் மிக்கதும் நீடித்தகாலம் பாவிக்கக் கூடியதுமான லக்சபான டார்ச் பாட்டரிகளையே உங்கள் டார்சில் பொருத்தி பாவியுங்கள்.

இறக்குமதி செய்யப்படும் ஏனைய ரக டார்ச் பாட்டரிகளைப் பார்க்கிலும் லக்சபான டார்ச் பாட்டரிகள் சிறந்த முறையில் பாவனைக்கு உகந்தவை. ஏனெனில் இவை உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றதாகத் தயாரிக்கப்படுகின்றன. மேலும் தயாரித்த புதிதிலேயே உங்களுக்கு கிடைக்கின்றன

இன்று கிடைக்கக் கூடிய சிறந்த டார்ச் பாட்டரி

லக்சபான






மகத்தான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த






லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றும் புகழும் இராமாயண காவியத்தின் சித்திரமான ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்கிரீனில் பார்த்து மகிழுங்கள்!

## விளம்பரம்

### கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை

### பழைய மாணவ மாணவிகள் மன்றம்

மேற்படி மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் 12-7-65 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

தயவு செய்து அனைவரும் சமுகந் தரவும்.

இங்ஙனம்,
க. மயில்வாகனம்,
அழைப்பாளர்.

குலகமம்.
கிளிநொச்சி, 452


## தமிழாசிரியர் கூட்டம்

பருத்தித்துறை, செவ்.

வடமராட்சித் தமிழாசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு ஆ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வடமத்திய ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி திரு மு சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், வ இ த ஆ ச தலைவர் பண்டிதர் எஸ பொன்னுத்துரை, திரு க இ குமாரசாமி ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்

# கல்லூரிகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள்

குரும்பசிட்டி, செவ்.

சோப்ளாய் கிறிஸ்தவக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி சென்றவார இறுதியில் கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது 243 புள்ளிகளைப் பெற்ற செல்லையா இல்லம் சாம்பியன் கோஷ்டியாக தெரிவு செய்யப்பட்டது. நவரத்தினராஜா இல்லம், வைட்ரெனி இல்லம், பெட்றோ இல்லம் ஆகியன முறையே 205, 176, 166 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டன, வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. பெருமையினுர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தார். செல்லையா இல்லம் அஞ்சல் ஓட்டங்களில் அதி ஸ்தானங்களைப் பெற்றுக்கொண்டது.

நான்கு இல்லங்களுக்கிடையே நடந்த விளையாட்டுப் போட்டியில் பின்வருவோர் பிரிவுச் சாம்பியன் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

கீழ்ப்பிரிவு ஆண்:- பி. முத்து மயில்வாகனம்,பெண்கள்:எஸ. கிரியரமணி

மத்தியபிரிவு ஆண்கள்: பி அம்பலவணர்,பெண்கள்: கே. கலாபவாணி

மேற்பிரிவு ஆண்:- ஆர். சுகுணசபேசன்,பெண்கள்: கே. கமலாதேவி.

* * *

உடுப்பிட்டி, செவ்.

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி சென்றவார இறுதியில் நடைபெற்றது. போட்டியின் பிரதம விருந்தினராக உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரம் கலந்துகொண்டார்;

குண்டுஎறிதலில் செல்வன் எம. லட்சுமிகாந்தன் புதிய சாதனையை நிலைநாட்டினுர், எம். கிருஷ்ணகாந்தன் பரிவட்டம எறிதல், ஈட்டி எறிதல் ஆகியவற்றில் சாதனைகளை நிலைநாட்டினுர்.

சாம்பியன் வெற்றிக்கேடத்தைக் காந்தி இல்லம் சுவீகரித்துக்கொண்டது,

இல்லங்களின் புள்ளிவிபரம் வருமாறு: காந்தி இல்லம்-281, வள்ளுவன் இல்லம்- 168, பாரதி இல்லம்- 150.

வெற்றிவீரர்களுக்கு திரு. மு சிவசிதம்பரம் பரிசில்களை வழங்கினுர்.

* * *

வல்வெட்டித்துறை, செவ்.

தல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி வருடாந்தவிளையாட்டுப்போட்டி சென்றவாரம் யாழ்ப்பாண அரசாங்க உதவி அதிபர் திரு ஏ. பெருமையினுர் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

வெற்றிபெற்ற வீரர்களுக்கு சிறுமதி பி. ஈ. இராஜேந்திரா பரிசுகள் வழங்கினுர்.

## இசைப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறைத் தொகுதிப் பாடசாலைகளின் வருடாந்த இசை விழாவுக்கான தேர்வுப் போட்டிகள் செம்பியன்பற்றில் நடைபெற்றன.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை நிகழ்ச்சிகள் வருமாறு:-

நாடகம்- நாகர்கோவில் ஆர். சி பாடசாலை, தாளையடி ஆர். சி பாடசாலை, செம்பியன் பற்று அரசினர் பாடசாலை.

கிராமியப் பாடல்- தாளையடி ஆர். சி. பாடசாலை, மருதங்கேணி சைவப் பாடசாலை, செம்பியன்பற்று ஆர். சி. பாடசாலை.

அபிநயம்- நாகர்கோவில் நாகேஸ்வர வித்தியாசாலை, ஆழியவளை சி. சி பாடசாலை.

கீழைத்தேசநடனம்- மருதங்கேணி சைவப் பாடசாலை, நாகேஸ்வர வித்தியாசாலை,

கிராமிய நடனம்- செம்பியன் பற்று அரசினர் பாடசாலை, நாகர்கோவில் ஆர். சி. பாடசாலை.

## சுந்தரர் இல்லம் வெற்றி

சாவகச்சேரி, செவ்.

யாழ்ப்பாணம் நாவற்குழி மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டி வித்தியாலயத்தில் வைத்தியகலாநிதி திருமதி பேரம்பலத்தின் தலைமையில் நடைபெற்றது. மூன்று இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் சுந்தரர் இல்லம் 208 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை அடைந்தது. அப்பர் இல்லம் இரண்டாம் இடத்தையும் சம்பந்தர் இல்லம் மூன்றும் இடத்தையும் அடைந்தன. தனிப்பட்ட சம்பியன்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

ஆண்கள் கீழ்ப்பிரிவு: சோ. செல்வராசா, மத்தியபிரிவு: அ இராமலிங்கம், மேற்பிரிவு: ஐ கந்தசாமி, மா, கி-டிணன்.

பெண்கள்: கீழ்ப்பிரிவு: ச காந்தநாயகி, மத்தியபிரிவு: இ இராஜேஸ்வரி, மேற்பிரிவு: து, செல்வநாயகி.

## வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 7-7-65

### கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிபதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு, 7-45 போச்சு. 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை. 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

## குரும்பசிட்டியில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், புதன்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 30-ம் ஆண்டு நிறைவும், முத்தமிழ் பெருவிழாவும் இம்மாதம் 9 ம், 10 ம், 11 ம் திகதிகளில் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

முத்தமிழ் பெருவிழாவின் முதல் நாள் மாலை நிகழ்ச்சிகள் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனுர் அரங்கில் திரு. ச. பொன்பநாயகம் தலைமையில் நடைபெறும். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு. வேலுப்பிள்ளை, திரு. கி லக்ஷ்மணன், சைவப் புலவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உரை நிகழ்த்துவர். இரவு நிகழ்ச்சி "இலங்கையர்கோன் அரங்கில்" திரு. இராஜ அரியரத்தினம் தலைமையில் நடைபெறும். கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி 'பொன்னுக்குமாரு அரங்கில்' இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் நடைபெறும். 'கீதிக்கரங்கள்' காவிய அரங்கேற்றத்துடன் ஆரம்பமாகும். இந்நிகழ்ச்சியினில் கவியரங்கம் இடம் பெறும். கவிஞர்கள் இ. நாகராஜன், இ அம்பிகைபாகன், செ. கதிரேசர் பிள்ளை, நா. ஆறுமுகம், சி. ஆறுமுகம் ஆகியோர் இக் கவியரங்கில் கலந்துகொள்வர்.

அடுத்த நிகழ்ச்சி கணேசையர் அரங்கில் காணி அபிவிருத்தி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெறும். சேர் கந்தையா வைத்தியநாதன், முதலியார் குலசபாநாதன், அட்டன் ஹைலன் கல்லூரிஅதிபர்திரு இரா.சிவலிங்கம், இலங்கை வானொலித் தமிழ்பேச்சுப் பகுதி அதிகாரி திரு.அருள் தியாகராசா ஆகியோர்உரைநிகழ்த்துவர். இதையடுத்து 'அப்பாக்குட்டி அரங்கில்' சோதி சு வித்தியானந்தன் தலைமையில் கதம்ப நிகழ்ச்சிகள் இடம் பெறும்,

விழாவின் மூன்றும் நாள் முதல் நிகழ்ச்சி 'ஈழகேசரி பொன்னையா அரங்கில்' திரு. கே. பி. ஹரன் தலைமையில் நடைபெறும், அப்போது இலங்கை வானொலி நாடகப் பெறுப்பாளர் திரு. எஸ். சண்முகநாதனுக்கு பட்டமளிப்பு இடம் பெறும், கலையரசு கே. சொர்ணலிங்கம், எம். ஏ. ரகுமான் ஆகியோர் பட்டமளிப்பு உரை நிகழ்த்துவர். திருவாளர்கள் கா. சிவத்தம்பி, க. செ. நடராசா, எஸ். பொன்னுத்துரை ஆகியோர் விரிவுரைகள் நடத்துவர்.

விழாவின் இறுதி நிகழ்ச்சி 'கலைப் புலவர் நவரத்தினம் அரங்கில்' திரு. க. கனகசபை தலைமையில் நடைபெறும் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## ஏபிரகாம் இல்லம் முதலிடம் பெற்றது

சுழிபுரம், செவ்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டியில் ஏபிரகாம் இல்லம் 583 புள்ளிகளைப் பெற்று முதலிடம்பெற்றது. போட்டிகள் கல்லூரி விளையாட்டு மைதானதில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கே. வி. ஜோர்ஜ் கலந்துகொண்டார், திருமதி ஜோர்ஜ் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கினுர்.

## சைவப் பிரசங்கம்

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலில் சைவப் பிரசாரகர் திரு வே. கந்தையா 'அருட்குரு' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்தினுர்.


## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

நடராசா — ஜெகஜோதி

சித்தங்கேணி வே கந்தையாவின் இளைய மகனும் சித்தங்கேணி தபால் அதிபர் இராசரத்தினம், காலுவில் இஞ்சினியர் கதிரவேற்பிள்ளை ஆகியோரின் இளையசகோதரருமான நடராசாவுக்கும் சித்தங்கேணியைச் சேர்ந்த இளைப்பாறிய தபால் அதிபர் கணபதிப்பிள்ளையின் மகள் ஜெகஜோதிக்கும் இன்று புதன்கிழமை (7-7 65) மாலை 6 மணிக்கு திருமணம் மணமகன் இல்லத்தில் நடைபெறும். 620

### வைத்தியம்

சலரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, நீட்டு இளைத்தல், புத்திரப்பேறு. தகுந்த முறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 589

### WANTED

"WANTED a Manager for Rural Credit and Banking section of the Paranthan M P. C S Ltd, Paranthan Age between 21 and 30 years Minimum qualification G C E or S S C English medium with four credits at one sitting Preference will be given to those with qualifications in Banking Commerce and co-operative training. Security cash Rs 2000/- and property Rs 5000/ Selected candidate will be required to undergo training at the Polgolla Co-operative Training College and at a branch of the Peoples Bank and will be paid a stipend of Rs 100/- per month during this period He must be prepared to work at the society for at least five years after training Applications close on 15-7-65"

621 President.

### தேவை

அன்னம்ஸ் சாதி இன்டஸ்ரீயில் செவு வேலை செய்வதற்கு திறமை உள்ள பெண் மணிகள் உடன் தேவை. போடிங் வசதி உண்டு.

விபரங்களுக்கு:- விக்னேஸ்வரா ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம்; அன்னம் சாறிவேக்ஸ், 27, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்; அன்னம்ஸ் சாதி இன்டஸ்றீஸ், கோவில்வீதி, கொக்குவில், 618

சேலைகளுக்கு குஞ்சம் (ரசல்) இணைக்கதெரிந்த பெண்மணிகள் தேவை. தையல் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

அன்னம்ஸ சாதி வேக்ஸ், விக்னேஸ்வரா ரெக்ஸ்ரைல் மேல்மாடி, 27. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 619

யாழ்ப்பாணம் இல: 8 பிறவுண் றோட்டிலுள்ள 'மொடேர்ன் ஸ்டைல்' தையல் நிலையத்துக்கு தையல் பூவேலைகள் தெரிந்த பெண்கள் தேவை. விபரங்களுக்கு 10-ந் திகதிக்குமுன் நேரில் விண்ணப்பிக்கவும். 623

### விற்பனைக்கு

கிளிநொச்சி கண்டிறோட்டில் இரும்புச்சாமான்களும், தளபாடச் சாமான்களுடனும் வியாபார ஸ்தலம் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும் V. K. தங்கராசா, அடைவு கடை, கண்டி றோட். கிளிநொச்சி. 613


## சின்னூலடி கோஷ்டி வெற்றி

காரைநகர், செவ்

காரைநகர் வாரிவளவு கோஷ்டிக்கும் சின்னூலடிக் கோஷ்டிக்குமிடையில் உதைபந்தாட்டப்போட்டி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வாரிவளவில் நடைபெற்றது. திரு நாகரத்தினம் விளையாட்டிற்கு மத்தியஸ்தராக இருந்தார். சின்னூலடிக் கோஷ்டிக்கு 3 கோல்களும் வாரிவளவுக்கோஷ்டிக்கு 2 கோல்களும் கிடைத்தன.


தமிழில் புதியது; மகத்தானது!

## வரதரின் பலகுறிப்பு

தமிழ் டைரக்டரி 1965—66

- பாராளுமன்றம், அமைச்சரவை, அரசாங்கப்பகுதிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய விபரங்கள்.
- அஞ்சல் (தபால்) விபரங்கள்; புகையிரத, விமான சேவை நேர அட்டவணைகள்; வரிகளைப்பற்றிய விபரங்கள்; தொழில், வருமானவரிச் சட்ட விபரங்கள்.
- பெரியார் நினைவு தினங்கள், திருவிழாத் தினங்கள், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ பெருநாட்கள், மற்றும் அமாவாசை, பூரணை, அட்டமி, நவமி, நட்சத்திரம் முதலிய பஞ்சாங்கக் குறிப்புகள்.
- எழுத்தாளர், பேச்சாளர், இசைக்கலைஞர், ஆயுள்வேத வைத்தியர், பிரமுகர் முதலியோரின் பெயர், முகவரிகள்.
- கல்லூரிகள், பாடசாலைகள், நூல்நிலையங்கள், இலங்கையில் வெளியான தமிழ் நூல்கள், அங்கீகரிக்கப்பெற்ற பாடசாலைப் புத்தகங்கள் முதலிய விபரங்கள்.
- தோட்டங்கள் பற்றிய விபரங்கள்.
- எல்லா இடங்களிலுமுள்ள பலவிதப்பட்ட வர்த்தக நிலையங்களின் விபரங்கள்.
- பெரிய அளவில் இலங்கை வீதிகளின் படம்.


இன்னும் எத்தனை எத்தனையோ விபரங்கள்! உங்களுக்கு நாளாந்தம் ஏற்படுகிற அநேக சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துவைக்கும் ஒரே ஒரு துணை நூல். சுமார் 700 பக்கங்களுடன் அழகும் உறுதியும் மிக்க கவர்ச்சிகரமான பதிப்பு.

ஒவ்வொருவரிடமும் அவசியம் இருக்கவேண்டிய நூல்! — இதன் பிரதி ஒன்று இல்லாமல் எந்த ஒரு நூல் நிலையமும் சிறப்படையாது!

விலை ரூபா 10. பார்சல்செலவு ரூபா 1.

வரதர் வெளியீடு,
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# உருளைக்கிழங்கில் இது இரண்டு விதம்!



இந்தப் படத்தில் காணப்படுபவை உருளைக்கிழங்குகள். சிலதினங்களுக்குமுன் இக்கிழங்குகளின் இறக்குமதிக் கட்டுப்பாடு இப்பொழுது நீக்கியுள்ளதென்பது உண்மையே. ஆனால் பாவனைக்கு ஏற்ற கிழங்குகள் மிகக் குறைவு. இப்படத்தில் காணப்படும் பெரியகிழங்குகள் யாழ்ப்பாணத்தில் தனிப்பட்ட வர்த்தகர்கள் விற்பனை செய்கின்றனர். பெரியகிழங்குகள் நல்ல கிழங்குகளாகவுமிருக்கின்றன. பனைநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடைகளிலும் கூட்டுறவு மொத்தஸ்தாபனக் கடைகளிலும் விற்கப்பெறும் கிழங்கின் விலையைவிட இது சிறிது மலிவும்கூட. கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கடைகளிலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கடைகளிலும் விற்கப்படும் கிழங்குகள் காய்ந்து, வரண்டு, சுருக்கி பாவனைக்கு உதவாதவைகளாகவுமிருக்கின்றன. தனியார் கடைகளில் விற்கப்பெறும் கிழங்குகளையும் கூ. மொ. வி. கடையில் விற்கப்பெறும் கிழங்குகளையும் இப்படம் காட்டுகிறது.

## ஆலோசனைக் கமிட்டி

கொழும்பு, செவ்

கைத்தொழில் சம்பந்தப்பட்ட பல்வேறு இலாகாக்களின் தலைமைப்பீடங்களை கொண்ட கைத்தொழில் ஆலோசனைக் கமிட்டி ஒன்றை கைத்தொழில் அமைச்சர் நிறுவியுள்ளார்.

## ஈழம் தந்த . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணகியின் புலம்பலை கிளைவூட்டுகின்றது.

எமது புலவர் அந்த நூலில் ஆரியமாதி அயல்மொழி மட 'வாள் சீரிய பணிவொடு சேவடி பரவ' இருந்த தமிழ்ச் செல்வியின் பெருமையும் இன்று அவள் இருக்கும் நிலையையும் அவளை மறந்த எங்கள் இழிநிலையையும் எடுத்துக் காட்டி அவளுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளையும் அழகாக எடுத்துச் சொல்கின்றார்.

இனிமேல் தமிழ்த்தாயை எந்தப்புலவரும் பாராட்டமாட்டார்கள். காரணம் அவர்கள் பாடுவதற்கு இடமில்லாதபடி இந்தப்புலவரே எல்லாவற்றையும் பாடிவிட்டார். இவ்வாறு நான் சொல்லவில்லை. அண்ணாமலைப்பல்கலைக்கழகத்த மிழ்த்துறைத் துணை பேராசிரியர் வித்துவான் மு அருணாசலம் பிள்ளை அவர்கள் பாராட்டியிருக்கின்றார். இன்னும் 'ஈழவளநாட்டில் தோன்றிய இளஞாயிறு போன்ற சோமசுந்தரப் புலவரால் தமிழகத்திற்கு ஏறக்குறைய பதினாயிரம் கவிதைகளைத் தந்திருக்கிறார். இவ்வாறு வற்றாத ஊறறாக வாழ்ந்துவரும் புலமை நலம் கனிந்த இமபெரியார் இன்னும் பல ஆண்டுகள் வாழ்க என்று வாழ்த்துகிறார்.

இவ்வாறு பழமைக்கும் புதுமைக்கும் ஓர் பாலமாக, சமயப் பொதுமையாளராக, சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்து தமிழினத்தை, தமிழ்த் தாயை, தமிழ்வளங்கும் ஈழநாட்டைப் பாடுவதையே தம மூச்சாகக் கொண்டு வாழ்ந்துவந்த சோமசுந்தரப்புலவர் ஒருசில ஆண்டுகளுக்குமுன் மறைந்துவிட்டார் எனினும் அவர்விட்டுச் சென்ற கவிதைகள் இன்றும மறையவில்லை. அவருடைய புகழ் மறையவில்லை.

## தீ வைத்தார்; தீ யிட்டார்
### விசாரணையின்போது சாட்சியம்

திருக்கோணமலை, செவ்

சீனக்குடா பொலிஸ் எல்லையிலுள்ள கச்சிக்குடா என்னும் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் உணவு கொண்டு செல்லும் ஜெயினுடீன் என்பவர் சில காடகள ஆச்சரியத்தக்க முறையில் நடந்துகொண்டு திடீரென தன்மீது மண்ணெண்ணையை ஊற்றி தனக்கும் தீ வைத்து நித்திரை செய்யும் குடும்பத்தினர் மீதும் தீயிட்ட சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. ஜெயினுடீன் உட்பட மூவர் திருக்கோணமலை ஆஸ்பத்திரியில் மரணமானார்கள்.

மரணவிசாரணையின் போது எம் உமுசால்மா தெரிவித்ததாவது:

நான் நந்தாவதியின் வீட்டிற்குப் பக்கத்தில் வசித்து வந்தேன். கடந்த இரண்டு வாரங்கள் நந்தாவதி குடும்பத்தினர் சுகயீனமுற்றிருந்தார்கள் இதற்காக கிண்ணியாவிலிருந்து மௌலானா என்பவர் அழைக்கப்பட்டு ஒரு இரவு முழுதும் மந்திர வேலையில் ஈடுபட்டிருந்தார் ஜெயினுடீன் நந்தாவதியின் வீட்டிலிருந்து சாப்பாடு எடுத்துச் செல்வார் அன்றிரவு நந்தாவதி தன்னையும தங்கள் வீட்டிற்கு அழைத்திருந்தார் ஆனால் முதலில் நான் பயந்து செல்லவில்லை பின்னர் எனது கணவர் வற்புறுத்தலின் பேரில் சென்றேன் இரவு 8 மணிக்கு நித்திரைக்கு சென்றேன். ஜெயினுடீன் நித்திரை செய்யாது கூரையை பார்த்தவண்ணமேயிருந்தார். பின்னர் 'ஐயோ' என்ற சத்தம் கேட்டு நான் எழுந்த போது ஜெயினுதீன் ஹமீட் என்பவரையும் மற்றும் பலரையும் ஓர் இரும்பால் தாக்கக் கண்டேன், பின்னர் தன்மேல் மண்ணெண்ணெய் ஊற்றி அதன்பின்னர் அனிமா, ஹமீட், புஸைபலதா மேலும் என்னெண்ணெய் ஊற்றித் தீவைததார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். மாதவராஜா விசாரணையை ஒத்திவைத்தார்.

## ஆசிய அபிவிருத்தி வங்கி

கொழும்பு, செவ்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனை கமிட்டியை சேர்ந்த உத்தியோகத்தர்களின் தூதுகோஷ்டியொன்று இம்மாதம் இலங்கை வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இக் கோஷ்டி இலங்கையில் இவ்வங்கியின் கிளையை ஆரம்பிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவார்களென தெரியவருகிறது.

## தமிழில் இல்லை!

வெள்ளவத்தை, செவ்.

இம்மாதம் 2-ம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் பல்வேறு அரசாங்க இலாகாக்களிலும் கூட்டுஸ்தாபனங்களிலும் வெற்றிடங்கள் இருப்பதாக ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குரிய தமிழ் மொழி பெயர்ப்பு எதுவும் கொடுக்கப்படாமையால் தமிழ் மட்டும் தெரிந்தோர் அவ்வெற்றிடங்கள்பற்றி அறிய முடியாமல் இருக்கின்றது இதன்காரணமாக இவ்வுத்தியோகங்களுக்கு மனுப்போட முடியாத இக்கட்டான நிலையில் இவர்கள் இருக்கிறார்கள்.

## காணி மந்திரி விஜயஞ் செய்வார்

முல்லைத்தீவு, செவ்

வவுனியாத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு தா. சிவசிதம்பரத்தின் அழைப்புக்கிணங்க காணி அபிவிருத்தி மின்சாரஅமைச்சர் திரு சி பி டி சில்வா விரைவில் முல்லைத்தீவிற்கு விஜயஞ் செய்யவிருக்கிறாரெனவும், அவர் விஜயத்தின்போது இப்பகுதியிலுள்ள மக்கள் பல குடியேற்றத் திட்டங்களையும் விவசாயத் திட்டங்களையும் எம் பி யுடன் நேரில் சென்று பார்வையிடுவாரெனவும் தெரியவருகிறது.

## விசேஷ கமிட்டி

கொழும்பு, செவ்

மாகாணங்கள்தோறும் மாடுகளை வாங்கும் நிலையங்களை நிறுவவும், மாட்டிறைச்சியின் விலையைக் குறைப்பதற்காக பிரதேசரீதியாக மாட்டிறைச்சிக் கடைகளை திறக்கவும், ஒரு விசேஷ கமிட்டி நேற்று தெரிவு செய்யப்பட்டது. மந்திரிசபைக் கொள்கைவிளைவாசிகள கமிட்டி இந்த விசேஷ கமிட்டியை தெரிவுசெய்தது.

## இடமாற்றத்துக்கு ஆதரவு

சுன்னாகம், செவ்வாய்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் திரு ஜகந்நாதனின் மாற்றத்தை ஆதரித்து அவ்வூர் பெற்றார் ஆசிரியர் சங்கம் கல்விமந்திரிக்கு தந்திச்செய்தி அனுப்பியுள்ளது. மேற்படி ஆசிரியர் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிர்வாகசேவை பயிற்சி

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை நிர்வாகசேவையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களில் மூவர் யாழ்ப்பாணம் கச்சேரியில் யாழ்ப்பாணம் காரியாதிகாரி கந்தோரில் சென்ற திங்கட்கிழமையிலிருந்து பயிற்சி பெற்று வருகிறார்கள்,

செல்வி கே ராஜலக்ஷ்மி அம்மாள், திரு, எஸ. சிவதாசன், ஏ அல்பிரட் ஆகிய மூவருமே இங்கு பயிற்சி பெறுபவர்கள், இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள முதல் பெண் செல்வி கே ராஜலக்ஷ்மி அம்மாள் என்பதுகுறிப்பிடத்தக்கது.

## மாணவர் வேலை நிறுத்தம்

உடுவில், செவ்வாய்

பத்தேகம தொகுதியிலுள்ள மத்திய மகா வித்தியாலயமொன்றில் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் 600 மாணவர்கள் நேற்று மூன் தினம் வேலைநிறுத்தம் செய்தனர். ஒரு மாணவன் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளாராம் இக்க வித்தியாலயத்தில் அதிபரோ அல்லது உப அதிபரோ இன்னமும் நியமிக்கப்படவில்லையாம்.

## பெயர் மாற்றத்தினால் கைகலப்பு

வெலிகம, செவ்வாய்

இங்கே நடைபெற்ற பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டமொன்றில் இரு கோஷ்டிக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு ஈற்றில் கைகலப்பில் கூட்டம் முடிந்தது. பலர் காயமுற்றனர். பள்ளிக்கூடத்திற்கு புதிய பெயர் வைப்பதற்காகக் கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் ஒரு சாரார் தாம் விரும்பிய பெயரை வைக்கவேண்டுமென்றும் மறு சாரார் பழைய பெயரே இருக்கவேண்டும் என்றும் வாதாடியபொழுதே மேற் கூறப்பட்ட சம்பவம் நடைபெற்றது.

## புதிய கட்டடம் திறக்கப்பட்டது

குரும்பசிட்டி, செவ்

மாவிட்டபுரம் புகையிரத நிலைய புதிய கட்டடம் ஆடம்பர வைபவங்கள் எதுவுமின்றி உத்தியோகபூர்வமாக வெள்ளிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவை யொட்டி புகையிரத நிலையம் சுற்றுப்புற பொது மக்களால் சைவ சமய சலாச்சாரப்படி நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய உற்சவம் ஆரம்பமாகியுள்ளதால் யாத்திரீகர் பலருக்கும் நல்ல வசதியாக இப் புகையிரத நிலையம் அமைந்துள்ளது. காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே வி. செல்வநாயகத்தின் துரித முயற்சியால் புதிய கட்டடத்தை அரசாங்கம் நிறுவியுள்ளது.

## நோயாளர் படும் அவதி

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு மற்றுமொரு பெருங் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. கடுமையான சுகயீனமுடையவர்களாக ஆஸ்பத்திரி வார்டுகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களை வார்ட்டுக்கு எடுத்துச் செல்லும் பொழுது கடுமையான வெய்யிலினாலும் அவர்கள் பாதிக்கப்பட வேண்டியிருக்கிறது. வெளிநோயாளர் பகுதிக்கும் வார்டுகளுக்கும் கூடாரத்தொடர்பு வசதி இல்லை,

சிகிச்சை நிலையத்திலிருந்து (ஓ பி டி) வார்ட்டுக்கு, நோயாளர்களை கூடாரமற்ற ஸ்ரெட்சர் மூலமாகவே எடுத்துச் செல்கின்றனர். இதன் விளைவாக பகல் நேரத்தில் கொதிக்கும் வெய்யிலில்தான் நோயாளர்களை வார்டுகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது, ஓ பி டி-க்கும் வார்டுக்குமுள்ள தூரம் சுமார் 100 யாராகும்,

கடுமையாக நோயுற்றிருக்கும் நோயாளி இதனால் மேலும் வேறு வியாதிகளுக்காளாக வேண்டியிருக்கிறது.

## மர்மம்!

கொழும்பு செவ்

கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரி சம்பள பிரிவில் நடக்கும் 80,000 ரூபா மோசடி காரணமாக ஒரு லிகிதர் தற்காலிகமாக வேலைநீக்கம்செய்யப்பட்டார், இப் பிரிவில் கடமையாற்றும் சிறுப்பர் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் திடீரென மரணமானார்.



## சாய்ப்புச்சட்டத்தை மீறுகின்றனர்?

காங்கேசன் துறை, செவ்

காங்கேசன்துறையில் சிலவர்த்தகர்கள் சாய்ப்புச்சட்டத்தை மீறி விடுதலை நாட்களிலும் கடைகளைத் திறந்து வியாபாரம் நடத்துவதாகக் கூறப்படுகிறது. இதனால் மற்ற வியாபாரிகளுக்கு கஷ்டம் ஏற்படுவதுடன வர்த்தக ஊழியர்கள் பாதிக்கப்படுவதாகவும சொல்லப்படுகிறது.

## நத்தை வேக பஸ் சேவை!

மாவிட்டபுரம், செவ்.

காங்கேசன்துறை வீதி வழியாக, கீரிமலைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே நடைபெறும் பஸ்சேவை சீர்கேட்டினால் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமநுபவிக்க நேரிடுகிறது.

இவ்வீதிவழியாக யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலைக்கான பஸ் சேவை அனேகமாக துரிதமாக நடைபெற்றபோதிலும் கீரிமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நடைபெறும் பஸ் சேவை; நத்தை வேகத்தில் இருப்பது பஸ்பிரயாணிகளுக்கு வியப்பை அளிக்கிறது.

சில நாட்களில் இரண்டுமணித்தியாலத்துக்குப் பின்னரே அடுத்த, அடுத்த பஸ் சேவை நடைபெறுகிறது. இன்று பகல் யாழ்ப்பாணம் வருவதற்காக காங்கேசன்துறையில் காத்திருந்த பிரயாணிகள் சுமார் இரண்டரை மணி நேரம்வரை பஸ் நிற்பாட்டுமிடத்தில் 'தவம்'கிடக்க நேரிட்டது.

## டட்லிக்கு மேலும் ஓய்வு?

கொழும்பு, செவ்வாய்

பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவின் உடல் நிலை தற்பொழுது திருப்திகரமாக குணமடைந்து வந்த போதிலும்; அவருக்கு பூரண ஓய்வு தேவையென்று பிரதமரைக் கவனித்துவரும் டாக்டர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

குறைந்தது இன்னும் ஒரு மாதகாலத்துக்காவது அவருக்கு ஓய்வு தேவையென்று டாக்டர்கள் தெரிவித்துள்ளதாகக்கூறப்படுகிறது. டாக்டர்கள் தெரிவித்திருந்தயோசனையை பிரதமர் திரு டட்லி சேனநாயகா ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

## லைசென்ஸ் வழங்கப்படமாட்டாது

கொழும்பு, செவ்

குடிவகை லைசென்ஸை புதிதாக வழங்குவதில்லையென உள்நாட்டு அமைச்சு தீர்மானித்துள்ளது.

புதிய குடிவகை லைசென்ஸ் கோரி, ஏற்கனவே பலர் விண்ணப்பித்துள்ளதாக அறியப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமென தமிழரசுக் கட்சிப் பாரிமெண்டரிக் குழு, மூவர் அடங்கிய உபகமிட்டி ஒன்றை நியமித்துள்ளது. இந்த உபகமிட்டியில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், கா. பொ. இரத்தினம் செ. இராசதுரை ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் வானொலி அஞ்சல் நிலையமொன்றும், ஒலிபரப்பு நிலையமொன்றும் அமைக்க அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் அண்மையில் யாழ்மாவட்ட இளைஞர் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதனை துரிதப்படுத்துமுகமாக, தபால் தந்தி மந்திரியுடன் இதுசம்பந்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கென உபகமிட்டி தெரிவுசெய்யப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.